மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023ம் ஆண்டு நவம்பர் திங்கள் 09ம் நாள் வியாழக்கிழமை

இ.ம.எண்.05/2023
உள்
அசல் வழக்கு எண்.35/2016
-------------

1. மாயகிருஷ்ணன் .... 1ம் மனுதாரர்/1ம் வாதி

2. ஜானகி
3. எம்.சீனிவாசகபெருமாள்
4. ஜெயலட்சுமி
5. எம்.கண்ணன்
6. எம்.அழகர்சாமி ... 2 முதல் 6 மனுதாரர்கள்/
உத்தேச 2 முதல் 6 வாதிகள்

/எதிர்/

1. பெரிய சுப்புராஜ்
2. சின்ன சுப்புராஜ் ... 1, 2 எதிர்மனுதாரர்கள்/
1, 2 பிரதிவாதிகள்

இந்த மனு 18.10.2023ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 09.11.2023ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது 2 முதல் 6 மனுதாரர்கள்/உத்தேச 2 முதல் 6 வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.இப்ராகிம்பாபு அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.முத்துக்கண்ணு அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், பிராதை மனுவில் கண்டபடி சீர்திருத்தம் செய்ய உத்தரவிடகோரி 03.10.2023ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **2 முதல் 6 மனுதாரர்கள்/உத்தேச 2 முதல் 6 வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

வழக்கின் வாதியும், 1ம் மனுதாரர் கடந்த 10.08.2023ம் தேதி இறந்ததை அடுத்து தாக்கல் செய்யப்பட்ட மேற்படியாரின் வாரிசுகளை மேற்படி வழக்கில் 2 முதல் 6 உத்தேச வாதிகளாக சேர்க்கக்கோரிய மனு இ.ம.எண்.04/2023 தேதி 27.09.2023ம் தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக பிராதை சீர்திருத்தம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் மனுதாரர்களுக்கு யாதொரு ஆட்சேபணையும் இருக்கப்போவதில்லை. இல்லாவிடில் மனுதாருக்கு ஏராளமான கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படக்கூடும். எனவே, மனுவில் கண்டுள்ள விபரப்படி பிராதை சீர்திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-**

மனுவில் ஒப்புக்கொள்ளக்கூடிய சங்கதிகளை தவிர ஏனை சங்கதிகள் தள்ளுபடி செய்யக்கூடியதாகும். மனுவானது எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்றாகும். எதிர்மனுதாரர்களை வீண் அலைக்கழிப்பு, இடைஞ்சல் உண்டு பண்ண வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுவை காலம் தாழ்த்தி தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்கும் மனுவை 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் இல்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

7) **<u>தீர்வு:-</u>**

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரர்களால் பிராதை மனுவில் கண்டபடி சீர்திருத்தம் செய்ய உத்தரவிடகோரி 03.10.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரர்களுக்கு தங்களது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டு கூறவில்லை. மேலும் இறந்துபோன ஒருவருக்காக அவரது தரப்பில் இருந்து அவருக்காக யாராவது வழக்கு நடத்த வேண்டியது அவசியமான மற்றும் நியாயமான ஒன்றாகும். மேலும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருந்த இ.ம.எண்.04/2023ம் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள், இ.ம.எண்.04/2023 மனு அனுமதிக்கப்பட்டுள்ளது மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, பிராதை மனுவில் கண்டபடி சீர்திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி 03.10.2023ம் தேதி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு நவம்பர் திங்கள் 09ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்கள்/உத்தேச வாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.